3ᐢ᧐ம

Kellar Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 24 முஹர 4 இதழ் 211

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9-9-1986

### பரு. இராணுவ முகாமிலிருந்து ரோந்து புறப்பட்ட

## இராணுவத்தினர் - விடுதலைப் புலிகள் உக்கிரமான நேரடி மோதல்

### படையினர் பலர் கொலை ; போராளிகள் இருவர்பலி!

[நமது நிருபர்]

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை ரோந்துசேவைக்குப் புறப்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற உக்கிரமான நேரடிமோதலில் இராணுவத்தினர் தரப்பில் பலர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

இந்த நேரடிச்சமரில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் பலியானுர்கள்.

இச்சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 7 மணிமளவில் நடைபவனியாக புறப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வி. எப் வீதி, கல்லூரி வீதி, மூனைவீதி, காந்தி சுடலையூடாக வரமுயன்ற சமயம் எமது தரப்பினர் மோட்டார் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

### ● கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்:

# யாழ். வைத்தியசாலை சிறுவர் வார்ட் பலத்த சேதம்

## குழந்தைகள் தெய்வாதீனமாக உயிர்பிழைத்தனர்

(அலுவலக நிருபர்)

**யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து யாழ் நகரைநோக்கி தொடர்ச்சியாக ஏவிவிடப்படும் பயங்கர மோட்டர் ஷெல் தாக்குதலுக்கு, யாழ் பெரியாஸ்பத்திரியிலுள்ள (பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியுடன்) சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் கட்டப்பட்ட சிறுவர் வார்ட்டும் இலக்காகி பலத்த சேதமடைந்துள்ளது. தெய்வாதீனமாக, அந்தவார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வந்த குழந்தைகளை தாய்மார், மார்புடன் அணைத்துக்கொண்டு அசுரவேகத்தில் வெளியேறியதால் உயிர்பிழைத்தனர்.**

அப்படி இருந்த போதிலும் 24ம் வார்டான சிறுவர் பிள்ளைகள் வார்டிலிருந்து பாய்ந்த ஷெல் துண்டொன்று 20ம் வார்ட் மலகூடத்திலிருந்து ந--ந்துசென்ற வயோதிப நோயாளியைப் பதம் பார்த்துள்ளது,

நேற்றுமாலை 6மணியளவில் இப்பயங்கரச் ஷெல் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணி தொடக்கம் யாழ் கோட்டை முகாமிலிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல் யாழ் நகரின் சுற்றுப்புற வட்டாரத்தை நோக்கு நடைபெற்றவண்ணமிருக்கிறது.

இத் தாக்குதலால் யாழ் நகரமக்கள் சொல்லொணுத் துன்பங்களை அனுபவித்த வண்ணமிருக்கின்றனர், எந்

(4ம் பக்கம் பார்க்க)

### உரிமை கோரப்படாத சடலம்

யாழ்ப்பாணம், செவ்

கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினுல் மரணமடைந்த 55 வயது மதிக்கத்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர்—— நேற்றும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றும் பல தடவைகள் ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கி வேட்டுக்களும் மேற்கொள்ளப்பட்டன.

காலைமுதல் தொடர்ச்சியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதால் யாழ் நகரத்தில் வர்த்தக ஸ்தாபனங்கள் சந்தைகள் என்பன யாவும் மூடப்பட்டிருந்தன.

ஆங்காங்கே சில கடைகள் திறக்கப்பட்டிருந்த போதிலும் பொதுமக்கள் நடமாட்டம் குறைவாக இருந்ததால் அவைகளும் நண்பகலுக்குப் பின் மூடப்பட்டன.

மினிபஸ் சேவைகள் வின்ஸர் சந்தியிலும், ஆரியகுளம் சந்தி

(4-ம் பக்கம் பார்க்க

## 'ஹெலி'யிலிருந்து துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம் செவ்

ஹெலிகொப்டர் மூலம் நேற்றுப் பிற்பகல் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. யாழ் நகரைக் குறியாகவைத்து இப்பிரசுரங்கள் வீசப்பட்டதாகத் தெரிகிறது. ஆயினும் அவை நகரின் மத்தியில் விழவில்லை.

இதேவேளை ஹெலிகொப்டரை நோக்கி போராளிகள் நான்கு பக்கங்களிலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். [ச]

## அம்புலன்ஸ் சேவை தடங்கலின்றி நடக்க 'ரெசோ' வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். நகரில் சேவையிலீடுபட்டிருந்த பொழுது நேற்று முன்தினம் 'ஷெல்' தாக்குதலினுல் சேதமடைந்த ரெசோவின் அம்புலன்ஸ் வண்டி திருத்தப்பட்டு சேவைக்கு விடப்பட்டுள்ளதாக இந்த அம்புலன்ஸ் வண்டிச் சேவை யாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். நகரில் பதற்றம் ஏற்படும் பொழுது ஆரியகுளம் சந்தி, வின்சர்சந்தி ஆகிய சந்திகளில் தரித்து நின்று சேவையிலீடுபடும் வாகனங்கள் ஓரமாக நின்று சேவையிலீடுபடுமாறும், குறிப்பிட்ட நேரத்திற்கு தரித்து நிற்கும் வாகனங்கள் எப்பொழுதும் புறப்படுவதற்கு தயாராக நிற்பதுடன் வீதி ஒழுங்குகளை அனுசரிக்க

(8ம் பக்கம் பார்க்க)

### கல்லடி,கிரான் அதிரடிபடைமுகாம் மீது

## போராளிகள் தாக்குதல்;

### பதிலுக்குப் படையினர் துப்பாக்கிப்பிரயோகம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்லடி அதிரடிப்படை முகாம் மீதும் கிரான் அதிரடிப் படை முகாம்மீதும் போராளிகள் நேற்றுக்காலை தாக்குதல் மேற்கொண்டனர்.

போராளிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது பதிலுக்கு இரு முகாம்களிலிருந்தும் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இத்துப்பாக்கிச் சமரில் இரு தரப்பிலும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைத்தொடர்

(4ம் பச்கம் பார்க்க)

## கோட்டையிலிருந்து ஏவிவிடப்பட்ட "ஷெல்" தாக்குதலில் விடுதலைப் புலிகள் இருவர் பலி!

யாழ்ப்பாணம், செவ்

யாழ்.கோட்டை இராணுவ முகமிலிருந்து ஏவிவிடப்பட்ட மோட்டர் ஷெல் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் இருபோராளிகள் பலியானுர்கள்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

மோட்டர் ஷெல் தாக்குதலில் வீரமரணமடைந்த போராளிகள் ராஜன் (குருநகர்), கந்தன் (கந்தர்மடம்) ஆகிய இருவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர அஞ்சலியைச் தெரிவித்துள்ளனர். [மா]

### 'ஷெல்' தாக்குதல் தொடர்பாக

## டிக்ஷிற்றுக்கு முறையிட பொதுஸ்தாபனங்கள் முயற்சி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண நகரத்தில் தொடர்ச்சியாக 'ஷெல்' தாக்குதல்கள் நடைபெறுவதால் வர்த்தக ஸ்தாபனங்கள், பாடசாலைகள், காரியாலயங்கள், போக்குவரத்துச்சேவை, வங்கிகள் என்பன உரிய முறையில் செயல்படமுடியாதிருக்கிறது. இதனை அரசின் அமைச்சர்களோ, உயர் அதிகாரிகள் யாவருக்கும் தெரியப்படுத்தி அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு. டிக்ஸிற்றுடன் தொடர்பு கொள்ள முயற்சிகள் நடைபெறுகின்றன.

பிரஜைகள்குழு மூலம் சகல ஸ்தாபனங்களும் இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### வடஇலங்கை மருத்துவக் கல்லூரியை

## பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர் அங்கீகரிக்கவில்லை

கொழும்பு, திங்கள்

வட இலங்கை மருத்துவக் கல்லூரி என அழைக்கப்படும் நிறுவனத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் அங்கீகரிக்கவில்லை.

இந்த மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்கள்யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் மருத்துவ பட்டப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்களென்று ஆணைக்குழுவின் செயலாளர் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## டாக்டர்கள் விடுதிமீது 'ஷெல்' தாக்குதல்

### வைத்தியர்கள் ஒரு மணிநேர வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,செவ்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்கள் விடுதியில் ஷெல் துண்டுகள் யன்னலைத் உடைத்துக் கொண்டு சென்று டாக்டர்கள் படுத்திருந்த கட்டில் அருகாக உள்ள சுவர்களைத் துளைத்துள்ளது. டாக்டர்கள். மயிரிழையில் உயிர்தப்பினுர்கள்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் நேற்று ஒருமணி நேரத்திற்கு வேலை செய்யா இயக்கத்தை மேற்கொண்டனர்

நேற்று முன்தினமிரவு 8மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி முன்வீதியை நோக்கி வந்து வெடித்த ஷெல் துண்டுகளே டாக்டர்கள் விடுதியில் புகுந்தவையாகும்.

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பலசரக்கு கடைக்கு தேவையான ரக்கைகள், கண்ணடி அலுமாரிகள் பிளேன் கண்ணடிகள் சிறபோட் ஆகியன விற்பனைக்கு உள்ளது. தொடர்புகொள்ளவும். செ கமுகாசலம் இயந்திர மரவேலை நிலையம். இருபாலைச்சந்தி.
(C-4495)

நல்லூரில் இரண்டு பரப்பு காணியில் நான்கு அறைகளை உடைய அழகிய நவீனவசதிகளைக்கொண்ட பெரியவீடு உடன் விற்பனைக்குண்டு. பாதி வீடாகவும் பிரித்துக்கொடுக்கப்படும். விளம்பர இல. C 4497, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 4497)

(1) Ford Consul EN நல்ல நிலையில், (2) தட்டச்சு யந்திரம் Remington portable (3) Two in one National Panasonic. ஸ்ரீநிவாசன், மருதனமடம். [C 4445]

சேவற்கொஞ்சுகளுக்கு பதிவு செய்தவர்கள் 9ம் திகதி, 10ம் திகதி, 16ம் திகதிகளில் தவருது பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்
(C 4471)

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) ஆங்கிலம் Standards - Portable உடன் விற்பனைக்கு Fudo Enterprises Jaffna Road, Manipay. (Siva Studio - Bitsman அருகாமையில்). [C4506]

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது. சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

A/L, O/L
DAY CLASSES
ஆரம்பம்:
10 09-86
BOND
Institution
JAFFNA.
(C 4503)

## விளம்பரத் திருத்தம்

5-9-86 ல் C 4441 இலக்கமிடப்பட்ட மணிக்கூடு சம்பந்தப்பட்ட விளம்பரத்துக்கும் பொ. அம்பலவாணர் 119 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய ஸ்தாபனத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கிறோம்.
நிர்வாகி — ஈழநாடு
(A 1251)

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING & PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ
(A 1041)

### சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: Fudo Enterprises மின்சார நிலைய வீதி, (3ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம் Brance: Jaffna Road, Manipay (Siva Studio - Bitsman அருகாமையில்) C 4507

## தேவை

ஆங்கிலம், தமிழ் அச்சுக் கோர்ப்பவர்கள் தேவை குறைந்தகால அனுபவம் உள்ளவர்களின் விண்ணப்பங்களும் ஏற்கப்படும் நடைமுறை ஊதியம், சகாயநிதி செலுத்தப்படும். இல. 6 குமார வீதி, நல்லூர், யாழ்ப்பாண
(C-4180)

எமது ஸ்தாபனத்திற்கு நல்ல அனுபவம் உள்ள பிஸ்கட் வகைகள் போடத் தெரிந்த பாஸ் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். ஒலிம்பிக் இன்டஸ்ரீஸ் பொற்பதி றேட், கொக்குவில்கிழக்கு
C 4500

எமது உற்பத்திப் பொருட்களை யாழ் குடாநாட்டில் வானில் சென்று விற்பனை செய்வதற்கும் ஓடர்சேகரிப்பதற்கும் முன்வியாபார அனுபவம் உடைய விற்பனைப்பிரதிநிதிகள் தேவை. இருவரின் சிபார்சுக் கடிதங்கள், முன்பு வேலைசெய்த சான்றிதழ்களுடன் நேரில்வரவும். Rolax Industries றுெலக்ஸ் இன்டஸ்றீஸ் 222A, கஸ்தூரியார்வீதி, ராதிகா ஜீவல்லர்ஸ் மேல்மாடி யாழ்ப்பாணம். [C-4477]

### ஈராண்டு நினைவஞ்சலி



Captain
C. மோகன்தாஸ்

அன்னையின் மடியில்:
14-09-1945
ஆள்பவன் பிடியில்;
01-09-1984
திதி: 10-09-1986

"குடும்பத்தின் ஒளி விளக்கே! ஆண்டுகள் இரண்டு மறைந்ததய்யா உன் அருமை முகம் காணுது அன்றுபோல் இன்றும் உன் பிரிவால் துடிக்குதய்யா எம் உயிர்". நாளை நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் உற்ருர், உறவினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

C. ரஞ்சனதாஸ்,
மகேந்திரா
டிரான்ஸ்போட்.
(C 4498)

## வகுப்புகள்

கரவெட்டி மொடேன் எடியுகேசன் சென்ரரில் க. பொ. த. [உயர்] 87-ம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு கலை / வர்த்தக / விஞ்ஞான வகுப்புகள் நடைபெறுகின்றன. [C-4412]

108, Brown Road, Jaffna A/L 87 இரசாயனம் ஆசிரியர் - சத்தீஸ், ஆரம்பம்: 13-09-86 சனி 3-30 p.m. வகுப்பு நேரங்கள்: சனி, ஞாயிறு 2-30 p.m- 3-30 p.m and 3-30 p.m. - 4-30 p.m
[C-4404]

Spoken English, பகல்நேர புதிய வகுப்பு. திங்கள், புதன், வெள்ளி நாட்களில். காலை 9-10 மணிவரை. ஆரம்பம்: 10-09-86. S. P. I yar, 12, வைமன் வீதி, நல்லூர்.
[C 4402]

## தவறிவிட்டது

இல, 660952659V நாகலிங்கம் பரமேஸ்வரன் புங்குடுதீவு 8ம் வட்டாரம் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வெள்ளி விலாஸ் இல: 288 கே. கே. எஸ். வீதி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் அல்லது அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C4509)

தங்கராசா தவராசா அராலி வடக்கு என்பவரது அடையாள அட்டை இலக்கம் 661540222V நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று வீடு திரும்பும் போது காணவில்லை. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து மேற்படி விலாசத்துக்கு தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். (C 4512)

### முதலிலேயே முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற கரணவாய் தெற்கைச் சேர்ந்த பொன்னையா முருகேசுவின் மரணசாதன விடயமாய்
— மரண மெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } 1214/T

பொன்னையா முருகேசு
கைம்பெண் மகேஸ்வரி
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
— மனுதார்.

மேற்படி இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே சொல்லப்பட்ட மரண மெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் 1985ம் ஆண்டு தை மாதம் 7ந் திகதியன்று அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1985 ம் ஆண்டு தை மாதம் 7ந் திகதி

நீதிமன்ற ஆணைப்படி,
ச. நடராசா
பதிவாளர்.

வரைவு,
பொ. குமாரசாமி,
மனுதார் சட்டத்தரணி
(C 4419)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கோண்டாவில் கிழக்கு சிவப்பிரகாசம் சிவலிங்கம் என்பவரின் மரணசாதனமின்றி இறந்த மரணச்சொத்துக்கள் சம்பந்தமாக.
மரணமெய்தியவர்.

வழ. இல. தத்துவம் /3984
சிவலிங்கம் கைம்பெண் கனகமணி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின்மரணச்சொத்தைநிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1986 ம் ஆண்டு ஆடி மாதம் 7-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது:
த சண்முகராசா,
மனுதாரின்
சட்டத்தரணி (C 4463)

## மக்கள் வெளியேற்றம்

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியின் துயர சம்பவங்களுக்கு பின்னரும் கணேசபுரத்தில் சில குடும்பங்கள் மூன்று மாதங்களாக வசித்து வந்தனர்.

இந்தக்குடும்பங்கள் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் கணேசபுரம் வாசியான கூட்டுறவு ஊழியர் நாதன் இராணுவத்தாகுதலுக்கு பலியானதை தொடர்ந்தும் அங்கு இடம் பெற்ற அசம்பாவிதத்தை தொடர்ந்தும் வெளியேறியுள்ளனர்.

## பாடநூல்கள் வழங்கும் வேலைகள்

சுண்டுக்குளி, திங்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் வடமாநிலப் பிரிவு- பயிற்சி தொடர்பான பாடநூல்களை வழங்கும் நடவடிக்கை துரிதப்படுத்தி வருகிறது.

86 ன் இரண்டாம், மூன்றும், நான்காம் மட்டத்தில் உள்ள மாணவர்கள் தங்களது பாடநூல்களை உடன் பெற்றுச் செல்லுமாறு இப் பல்கலைக் கழக வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இப்பாடசாலை நூல்களைப் பெற்றுக் கொள்ள வருபவர்கள் பதிவாளரால் அனுப்பப்பட்ட மறுபதிவுக்கான கடிதத்தையும் தவருது கொண்டு வருமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

2ம் மட்ட குடிசார் எந்திரவியற்பயிற்சி நெறிசெப்டம்பர் 13 ம் திகதி ஆரம்பமாக உள்ளது.

## வெளிவந்துவிட்டது

### விஞ்ஞானம்

மாதிரிவினுத்தாள்கள்-விடைகளுடன் G. C. E. (O/L)
டிசம்பர் 86

P. K. பாலசிங்கம்

கல்வி அமைச்சின் முன்னைநாள் G C E. (OL) விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர் முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், N C G E., G. C. E. (O/L) பிரதம பரீட்சகர் (விஞ்ஞானம்)

விற்பனை: ஸ்ரீலங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
C 4511 யாழ்ப்பாணம்.

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான அக்ஷய வருடம் ஆவணி மாதம் 25ந் திகதி (10-09-986 புதன்கிழமை முற்பகல் 9 மணி 02 நிமிடம் முதல் 10 மணி 30 நிமிடம் வரையுமான துலா லக்கினத்தில்வரும் சுபவேளையில்,

| | | |
|---|---|---|
| எங்கள் சிரேஷ்ட புதல்வன் | ★ | எங்கள் சிரேஷ்ட புதல்வி |
| திருநிறை செல்வன் | ★ | திருநிறை செல்வி |
| அரசேஸ்வரன் | ★ ★ | மச்சேந்திரதேவி |
| [சட்டமாணவன்] | ★ | [ஆசிரியை] |
| அவர்களுக்கும் | ★ | அவர்களுக்கும் |

திருநெல்வேலி சிவன் ஆலயத்தில் இனிது நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் உற்ருர், உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

| | |
|---|---|
| திருமதி | திரு திருமதி |
| கு. சிவபாக்கியம் | கனகலிங்கம் கனகம்மா, |
| குடும்பத்தினர் | குடும்பத்தினர் |
| கலைமகள் வீதி, | சாவகச்சேரி, |
| நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். | [மன்னுர்] |

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.
(இருவீட்டார் அழைப்பு)

செல்வன் க. மச்சேந்திரராஜா,
(மன்னுர் ராஜா டூர் பஸ் உரிமையாளர்)
இல. 58, பிரப்பங்குளம் றேட், யாழ்ப்பாணம்.
[C-4502]

## மணிவாக்கு

கலைகள் யாவும் முடிவில் கடவுளின் பெருமையை?ய விளக்குகின்றன. எனவே கற்கவேண்டியமுறையில் கலையைக் கற்றால் மெய்ப்பொருளை அடைவதற்கு அது உபாயமாகும்.

— கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி.

## நமது நோக்கு

# வளர்ச்சிவேண்டி நிற்கும் யாழ் பல்கலைக்கழகம்

அமெரிக்காவின் மிகப் பழைய, செல்வம் செல்வாக்குமிகுந்த ஹார்வார்ட் பல்கலைக்கழகம் சென்ற வாரம் தனது 350வது ஆண்டுவிழாவை ஒரு அலங்கார பட்டமளிப்பு விழா மூலம் கொண்டாடியது

இங்கிலாந்தின் மன்னனாக வரவிருக்கும் சார்ல்ஸ் பேரரசர் - கேம்பிறிட்ஜ் பட்டதாரி - அதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசியபோது இவ்வாறு குறிப்பிட்டார். ''சுமார் 18,000 பேரைக் கொண்ட சபையைப் பார்க்கும்போது பேரதிர்ச்சியாகவிருக்கிறது; இத்தகைய பெரிய வைபவமொன்றில் நான் முன்னெப்போதும் பேசியறியேன், ஆனால் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் 40,000 எருமை வளர்க்கும் விவசாயிகளுக்கு 1980ல் உரையாற்றிய அனுபவம் இன்று எனக்கு உற்சாகம் அளிக்கிறது''.

விவசாயத்துக்கும் பல்கலைக்கழகப் படிப்புக்கும் உண்டான உறவு இலங்கை போன்ற நாடுகளுக்கு- குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு எவ்வளவு அவசியமென்பதை சார்ல்ஸ் இளவரசர் அறியாதிருக்கலாம். அவருடைய இந்திய அனுபவம் பூரணமானதல்ல

இளவரசர் ஆற்றியஉரை மேனாட்டில் நிரம்பிவழியும் இவ்வுலக செல்வத்தை கண்டித்திருக்கிறது. தொழில் நுட்பத்தால் செல்வம் கொழிக்கும் நாடுகள், ஆன்மிகத் துறையை அலட்சியம் செய்வதால், உலகனைத்திலும் அறநெறிக்கும் அருளியலுக்கும் முதலிடம் கிடைப்பதில்லை. இது இன்று அகில உலகிலும் காணப்படும் அமைதியின்மைக்கு மூலகாரணமென்பது இளவரசரின் கருத்தாகும்.

ஹார்வார்ட்பல்கலைக்கழகம் உலகிலேயே மிகப் பெருமை வாய்ந்த ஆராய்ச்சிக் கழகம். பல அறிஞர்கள், கொடை வள்ளல்களின் தியாகத்தில் எழுந்த கலைக் கோயில, அமெரிக்க அரசின் கட்டுப்பாட்டுக்கட பாற்பட்ட சுதந்திர நிறுவனம்.

பழமையும் பெருமையும் வாய்ந்த இப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்புக் கொண்டாட்டம் அப்பெரும் தேசத்துக்கு எத்துணை முக்கியத்துவம் பெற்றதோ, அதே சமயத்தில், இலங்கையின் தமிழ் மக்களுக்குரித்தான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பட்டமளிப்பு விழாவை பெரும் நெருக்கடிக்குள் நடத்தி முடித்தது பாராட்டுக்குரியது.

இன்று எட்டு வயதடைந்தயாழ்பல்கலைக்கழகம் தனது350 வது ஆண்டுவிழாவை ஹார்வார்ட் போல் நடத்தும் வாய்ப்புப் பெற வேண்டுமென்பதே எமது பெரு விருப்பம். வரலாறு எத்தனை எதிர்பாராத வேகத்தையும், தளர்ச்சியையும் குறிப்பிடுகிறது. இருப்பினும் மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிதென்ற வாசகத்திற்கு யாழ்ப்பாணம் உதாரணமாவதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்.

கடந்த மாதக்கடைசியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் நாம் குறிப்பிடும் தனிச்சிறப்பு இதற்குச் சான்றாக இருக்கிறது.

இவ்விழாவில் வழங்கப்பட்ட கௌரவ பட்டங்கள் மூன்றும், இம்மண்ணில் பிறந்து வளர்ந்த மூவர்க்கு உரியவை. இம்மூவரும் யாழ்ப்பாணக் கல்லூரிகளில் தமது சிரேஷ்ட கல்வி பயின்றவர்கள் என்பது சிந்தனைக்குரியது

விழாவில் பிரசன்னமாகவிருக்க முடியவில்லை என்றபோதும் கௌரவ பட்டம் பெற்ற பெரியோர்கள் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் சிறப்பாகவும், நாட்டு மக்கள் மத்தியில் பொதுவாகவும் தமது சேவையால் தனி இடம் பெற்றவர்கள்.

அமரரான நிலையில் பேராசிரியர்கைலாசபதிக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கியதால் யாழ் பல்கலைக்கழகம் தனதுசிறப்பிக்கு தக்க கௌரவம் அளித்து தன்னைச் சிறப்பித்துக் கொண்டது.

தமிழ் கல்வித்துறையில் தலைமை பெற்றிருந்த கைலாசபதியின் மறைவு யாழ் பல்கலைக்கழகத்துக்கு பேரிழப்பு என்பதை அவர் நினைவால் தாமதமின்றி எழுப்பப்பட்ட கைலாசபதி அரங்கு என்றும் எடுத்துக்கூறும்.

விஞ்ஞானத்திலும் மருத்துவத்திலும், இலங்கையில் மட்டுமல்ல? சர்வதேச அரங்கிலும் புகழ்பெற்ற பேராசிரியர்கள் ஏபிரகாம ஹூவருக்கும் இரகுநாதர் கனகசுந்தரருக்கும் விஞ்ஞான கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது இவ்விருவரும் பேராசிரியர் கைலாசபதிபோல் அசல் யாழ்ப்பாணத்தவர்; அதேசமயம் உயிரிரசாயனவியலிலும் உடற் கூற்றியலிலும் தமக்கு மிக்கார் எவருமில்லையென்றசாதனை நிகழ்த்திய இருபெரியார்கள்

கௌரவப்பட்டங்களை நினைவில் கொண்டால், இன்றைய, இனிவருங்கால மாணவர்களுக்கு இது பெரும் பேரூக்கம் அளிக்கும் செய்தி; அதேசமயம் யாழ் பல்கலைக்கழகம் இத்தகைய நிபுணரின் சேவையை இழந்து விட்டதும்; மிக அவசியமாக வேண்டிநிற்பதும் புலனாகின்றது.

மருத்துவத்துறை பூரண வளர்ச்சியடையாத நிலையில், பொறியியல், விவசாயம், இன்றும் வெறும் திட்டங்களாக 'பேப்பரில்' உயிர்வாழும் நிலையில் வேகமாக வளரவேண்டிய யாழ் பல்கலைக்கழகம் எவ்வாறு முன்னேறுவது?

உலகில் பல இடங்களில் பணிபுரியும் யாழ்ப்பாண பேராசிரிய நிபுணர்கள் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டிய நிலை இன்றையநிலை.

### இன்று நினைவுதினம்

# நாகரிக வளர்ச்சியில் கிழக்கு, மேற்கு ஒத்துழைப்பு

''ஆசியாவின் பரிசுத்தம் என்பது ஒரு கடந்தகால கனவு அன்று. நவ இந்தியாவில் உயர்ந்த லட்சியங்கள் உண்டு. அரை நூற்றாண்டு காலமான நலிந்த கல்வெட்டுக்குட்பட்டுவிட்டவர்களுக்கு மத்திலுலும்கூட உயர்ந்த இலட்சியவாதிகள் இருக்கிறார்கள். முன்னேற்றம் என்ற மாயையினால் நாம் ஏமாற்றப் படவுமில்லை. வாழ்க்கையில் நல்ல நிலைமைகள் உருவாவதென்பது சில ஐரோப்பிய நண்பர்கள் கருதுவதுபோல, மனித வாழ்க்கையின் நோக்கம். உடல் திரியிலான ஆசைகளையும், சௌகரியங்களையும் தேடித்திரிவதல்ல, மனித மனதை, நடத்தையை, மனிதனில் மறைந்துள்ள சக்திகளை வளர்த்துக்கொள்ள அவைகளைப் பயன்படுத்திக் கொள்வதே.

எனவே நவ ஆசியாவுடனான ஒத்துழைப்பை வளர்த்துக்கொள்வதன் மூலம் ஐரோப்பா தனது ஆத்மீகத்தின் சகல அம்சங்களிலும் உலகத்தின் பொதுநாகரிக வளர்ச்சிக்கு இன்று தேவைப்படுவது என்னவென்றால்பொதுப்பிரச்னைகளைவிளக்கிக்கொண்டு அவைகளைத்தீர்த்துக்கொள்வதில் ஒத்துழைப்பதாகும்.

உலக நாகரிகவளர்ச்சிக்குஇந்தியா வழங்கும் அகச்செல்வங்கள் என்னவென்று கேட்கப்படுமானால் இந்திய கண்ணோட்டத்தில் இதற்கான மறுமொழியை அதன் சமயங்கள் தத்துவங்களிலும் நடைமுறை வாழ்வில் கடைப்பிடிக்கப் பிடிக்கப்படும் கோட்பாடுகளாலுமே காணப்படவேண்டும்'' (த டான்ஸ் ஒப் சிவா என்ற நூலிருந்து எடுக்கப்பட்டது. ஆ)

## கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி

பெரும் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். கீழைத் தேசத்தை மேலைநாடுகள்தான் நாகரிகப்படுத்த வேண்டும் என்ற பழைய கருத்தைக் கைவிடச் சொல்வதாகத்தான் இது இருக்கும் ஆனால் இந்த பத்தாம்பசலிக் கருத்து ஏற்கனவே நிராகரிக்கப்பட்டு விட்டது.

## மக்கள் கருத்து

### கிழிந்த நோட்டுக்கள் பிரச்னை

கிழிந்த நோட்டுக்கள் சம்பந்தமாக பலதரப்பட்ட கருத்துக்கள் வங்கிகளையும் அரசாங்கத்தையும்பற்றியும் நாளேடுகளில் எழுதப்பட்டு வருகின்றன.

பொதுமக்களாகிய நாங்கள் கிழிந்த நோட்டுக்களைப் பண்டமாற்றுச்செய்து கொண்டால் ஒருவரையும் கெஞ்சவோ, எதிர்பார்க்கவோ வேண்டிய தில்லை. தாளில் பெறுமதிக்குரிய இலக்கமுண்டு, வேறும் தேவைப்படும் அடையாளங்களுமுண்டு இப்போ பிரனைக்குரிய நோட்டுக்கள், பத்து ரூபாவும், ஐந்து ரூபா நோட்டுக்களுமே இதில் நடுத்தாளில் துவாரம், கிளிவு அல்லது கரைகளில் வெடிப்பு (அதையும் சிலர் ஒட்டிவிடுகிறார்கள்) செல்லாதென்பதற்கு அவை கள்ள நோட்டுக்களா, இல்லை தாள்களில் கிழிவும் துவாரங்களும் இருப்பதனால் அவற்றைச் செல்லாதென்று தட்டிக்கழிக்கிறார்கள் அவ்விதமான வெடிப்புகளையும், துவாரங்களையும் உண்டாக்கியவர்கள் யார்? பொதுமக்களாகிய நாங்கள் தான்

அதிகமாகத் தாள்களின் பண்டமாற்று சந்தைகளிலும் கடைகளிலுமே ஒரு பகுதியினர் இத்தாள்களை ஏற்க மறுப்பதினால்தான் கிளிந்த நோட்டுக்கள் பிரச்னையாக இருக்கிறது ஆகையால் பொதுமக்களாகிய நாங்கள் இதில் ஒற்றுமையாக கிழிந்த நோட்டுக்களை ஏற்றுக்கொண்டால் தற்காலிக கஷ்டங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம். இரண்டு ஐந்து தாள்களுக்கு ஒரு நல்ல ஐந்து ரூபா தாள் கொடுக்கும் வியாபாரமும் சில இடங்களில் நடைமுறையில் உள்ளதாக அறிகிறோம். அது எப்படிச் சாத்தியமாகிறது

எதுவானாலும் தற்போதைய சூழ்நிலையில் நம்மை நாமே திருத்திக்கொண்டால், பல விதமான இக்கட்டான நேரங்களில் எங்கள் இன்னல்களை இலகுவில் தவிர்த்துக்கொள்ளலாம்.

வே. சி. கந்தசாமி
கரவெட்டி.

## கிளிநொச்சி போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது

கிளிநொச்சி திங்கள்.

கிளிநொச்சியில் இராணுவ அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்று மூன்று மாதங்கள் பூர்த்தியாகிவிட்டன.

இந்த மூன்று மாதத்தில் கிளிநொச்சியில் பலத்த அழிவுகளும் மனித உயிர் இழப்புகளும் உடைமைச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

விவசாயம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு கிடக்கின்றன இடம்பெயர்ந்தமக்கள்கிளிநொச்சி நகரப்பகுதிக்கு திரும்பும் சூழ்நிலை உருவாகவில்லை.

ஆங்காங்கு நிறுவப்பட்ட அகதி முகாங்களில் ஆயிரக்கணக்கானோர் தஞ்சமடைந்துள்ளர் இவர்கள் நலன்களை அத்தியாவசியக் குழு பிரஜைகள் குழு முதலான பொது அமைப்புக்கள் கவனித்து வருகின்றன. பாடசாலைகளிலும் மாணவர் வரவு குறைந்துள்ளது. கிளிநொச்சி போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. (இ)

### சுதேச வைத்திய

## மூலிகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு

கிளிநொச்சி, திங்கள்

இலங்கையில் இன்று சுதேச வைத்திய மூலிகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் வடபகுதியில் உள்ள மூலிகை வளர்ப்போரும் தம்முடன் தொடர்பு கொண்டால் மூலிகை வளர்ப்பதற்கு ஊக்கமளிக்கவும் சந்தைப் படுத்தவும் தயாராக இருப்பதாகவும் அரசாங்க ஆயுள் வேத மருந்துக் கூட்டுத்தாபன கொள்வனவு அதிகாரியான திரு ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

திரு. ஸ்ரீகாந்தா மேலும் தெரிவித்ததாவது: இலங்கையில் சுதேச வைத்தியத்துறை நல்ல முறையில் முன்னேறி வரும் இவ்வேளையில் இவ் வைத்தியத்தின் மூலப்பொருளான மூலிகைகள் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது.

நமது தமிழ்ப்பிரதேசத்தில் எளிதாக பல அரிய மூலிகைகள் கிடைக்கக்கூடியதாக உள்ளது. அவற்றை அழியவிடாது பேணிப்பாதுகாப்பதன் மூலம் பலபேர் தொழில் வாய்ப்புக்களை பெறமுடியும்.

கைதடியில் உள்ள மாவட்ட அரசாங்க ஆயுள்வேத ஆஸ்பத்திரியில்தான் தங்கியுள்ளதாகவும் வடக்கில் உள்ள சுதேச மருத்துவர்களும் வைத்திய அபிமானிகளும் மூலிகை வளர்ப்போரும் தம்மிடம் தொடர்பு கொள்ளுமாறும் பிரஸ்தாப அதிகாரி மேலும் சொன்னார்.

கைதடியில் உள்ள ஆயுள் வேத ஆஸ்பத்திரி வளவில் அமையவுள்ள மூலிகைத் தோட்டத்திற்கும் ஆயுர்வேத மருந்துவக் கூட்டுத்தாபனம் மூலமாக பல உதவிகளை நல்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (வ)

## கும்பாபிஷேகம்

வேலணை, திங்கள்

வேலணைபெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலின் ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேக விழா நாளை 10ம் திகதி புதன் கிழமை நண்பகல் நடைபெறவிருக்கின்றது.

## உற்சவம்

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை குமார கோவில் மணவாளக்கோல உற்சவம் இன்று நடைபெறஉள்ளது.

விசேட அபிடேக ஆராதனைகளும் அன்னதானமும் இடம்பெறஉள்ளது

(இ)

## திருப்பணி வேலைகள்

பண்டத்தரிப்பு, திங்கள்

பனிப்புலம் அருள்மிகுமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் வழிபடுவோர் சபையின் ஆதரவில் சுமார் மூன்றுலட்ச ரூபா செலவில் திருப்பணி திருத்த வேலைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாதம் 14ம் திகதியன்று கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பதாக ஆலய வழிபடுவோர்சபைத் தலைவர் திரு. நாகராசா தெரிவித்தார்.

(இ)

## கல்லடி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து கல்லடி அதிரடிப்படை முகாமை அண்டியுள்ள பகுதியை அதிரடிப் படையினர் முற்றுகையிட்டு வீடு வீடாகச் சோதனையிட்டனர்.

இச்சோதனையின் போது காணப்பட்ட பெரும்பாலான ஆண்களைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர். விசாரணையின்பின்னர் மூன்று இளைஞர்களை முகாமில் தடுத்து வைத்துக் கொண்டு ஏனையோரை விடுதலை செய்தனர்.

கல்லடிப் பகுதியில் தேடுதல் நடைபெற்ற சமயம் 200 யார் தொலைவில் கல்லடிப் பாலத்துக்கண்மையில் உள்ளவெட்டவளவு மீது கிரனேட் வீசப்பட்டது, சேதவிபரம்பற்றி ஏதுவும் தெரிவிக்கப்படவில்லை. (மா)

## பொதுக் கூட்டம்

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் கிராம அபிவிருத்திச்சங்க விசேட பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமத்தின் மின்சாரம், வீதிகள் செப்பனப்படுத்துதல் போன்ற தேவைகளை நிறைவு செய்தல், மலசலகூடம் கட்டுவித்தல் அரசஉதவிகளை பெற்றுக்கொடுத்தல் ஆகிய விடயங்களை கிராம மக்களுக்கு விளக்குவதாக இக்கூட்டம் அமைகிறது. [இ]


### கடைசி நேர வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நல்லூர் தேர்த்திருவிழாவின் போது பெண்ணின் கழுத்திலிருந்த தாலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதனை ஒப்படைத்து கண்ணீரும் கம்பலையுமாயிருக்கும் பெண்ணின் துயர்துடைத்து தகுந்த சன்மானம் பெறுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். நா பாலசுப்பிரமணியம், 10. கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[C 4523]

### காணவில்லை

தையிட்டி ஆவளை இளையவன் கணபதியின் 9 வயது மகளை 7 9-86 தொடக்கம் காணவில்லை காணாமற்போனவரின் பெயர் சிறிதேவி-மாம்பழம் என்றும் அழைக்கப்படுவார். நிறம் சிவப்பு-சவுண் அணிந்திருந்தார். இவரைப் பற்றிய தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ. திருஞானம், விக்கினேஸ்வராவீதி, தையிட்டி, ஆவளை, காங்கேசன்துறை

[C 4524]

**லிடோ**
10-30, 2-30, 6-30
சிவாஜிகணேசன்
மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்**
10-30 2-30, 6-30
தியாகராஜன்
சில்க் சுமிதா
ஜெய்சங்கர்—பானுசந்தர்
நடித்த
**நீங்கள் கேட்டவை**
(கலர்) புதிய பிரதி


# ஒட்டுசுட்டானில் 'ஹெலி', பீரங்கித் தாக்குதல் மக்கள் இடம்பெயர்வு

முல்லைத்தீவு, திங்கள்

ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்று இரண்டு ஹெலிகொப்டர்களிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. ஹெலிகொப்டர்கள் வான் தாக்குதல் நடத்த இராணுவ முகாமிலிருந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டது.

இதனால் பீதியடைந்த மக்கள் அயற்கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர் இதேவேளை நேற்று முன்தினம் இராணுவமும் போராளிகளும் மோதிக் கொண்டதினால் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் பாதிப்படைந்தனர். அங்கு நடைபெற்ற பரீட்சைகளும் நடைபெறவில்லை. [ஒ]

## அ. இ. காந்திசேவா சங்க உறுப்பினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், செவ்

இன்று 9ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் 22ம் இலக்க மண்டபத்தில் வினோபாஜி ஜெயந்தியும் சங்கத்தின் சந்திப்பும் நடைபெறவிருப்பதாக அ. இ காந்தி சேவா சங்கம் அறிவித்துள்ளது, மதியஉணவு வழங்கப்படும்.


### 31ம் நாள் தியாகமைந்தனுக்கு வீர அஞ்சலி



**இராசநாயகம் மரியநாயகம் (ஜெயகுமார்)**
(அருச்சுணன்)
ஆண்டவன்படைப்பு:
1962-2-15
ஆண்டவன் பறிப்பு:
1986-8-10

எங்கள் தேசத்தின் விடுதலைக்காய்
எரியாய் துடித்த இளஞ் சுடரே
கருத்தினிலே கடினம் கொண்டு
உன்னை நீயே அழித்ததேனோ
இம் மரணங்கள் இங்கே மரணிப்பதெப்போ - என ஏங்கும்
உன் பிரிவிலே துயர் கொண்டு
ஊமையாகிய நண்பர்கள்
உம் நினைவுகள் என்றும் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

உன்பிரிவால் துயருறும், தாய், தந்தை, சகோதரர், உறவினரின் உளங்குமுறும் அஞ்சலிகள்.

[C 4527]


## கோட்டை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தக் கணமும் எவர் தலையில் ஷெல் விழுமோ என ஏங்கி ஏங்கி நகர மக்கள் தவிக்கிறார்கள்.

நேற்று முன்தினம் யாழ் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் தங்கும் விடுதிக் கட்டிடத்திலும் மோட்டார் ஷெல் தாக்கியதால். விடுதியிலுள்ள யன்னல்கள் பலத்த சேதமடைந்துள்ளன, அங்கு தங்கியிருந்த டாக்டர்கள் கடமைக்குச் சென்றதால் உயிராபத்திலிருந்து தப்பித்துக் கொண்டனர்

நேற்று மாலை 24ம் வார்டான சிறுவர் வார்ட்டில் ஷெல் விழுந்ததால் வார்டின் மேல் கூரையும் தொற்றுநோய் நீக்கும் பிரிவுக் கண்ணாடிகள், ரியூப்லைட்டுக்கள் ஆகியனவும் உடைந்து நொருங்கியுள்ளன.

மேலும் வார்டுக்குப் பக்கத்தில் உள்ள தண்ணீர்தாங்கி பைப் ஆகியன சேதமடைந்துள்ளதால் நீர் தொடர்ந்து வெளியேறிக்கொண்டிருக்கிறது.

ஷெல் தாக்குதலுக்குள்ளான சிறுவர் வார்ட் பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்பட்ட ஐந்தரை லட்சம் ரூபா செலவில் அண்மையில் கட்டப்பட்டது.

இவ்வார்டில் 5 டாக்டர்களும், 7 தாதியர்களும் நிரந்தரமாகக் கடமையாற்றுகிறார்கள்.

யாழ். ஆஸ்பத்திரியில் நடந்த ஷெல் தாக்குதல் சம்பவங்களால் சிகிச்சைபெற்று வரும் நோயாளிகள் தொடர்ந்து தங்கியிருக்க அஞ்சுகின்றனர்.

இத்தாக்குதல் சம்பவங்கள் குறித்து யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி யாழ் அரசாங்க அதிபர், இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கியுள்ளார். (மா)

## பருத்தித்துறை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

கொண்டனர். இத்தாக்குதலில் இராணுவத்தரப்பில்பலர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். மேலும் நிலைகொள்ளமுடியாத ராணுவத்தினர் முகாம் திரும்பினர்.

இந்நேரடி மோதலில் எமது தரப்பில் காந்தன் (வி உயதகுமார்) ஆடியபாத வீதி, கல்வியங்காடு ஜேம்ஸ் (பருத்தித்துறை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

மீண்டும் பி. ப 2-30 மணியளவில் இராணுவத்தினர் முகாமைவிட்டு புறப்பட்டு வி.எம். வீதிப்பக்கமாக வந்தபோது எம்மவர்கள் அவ்விடத்திற்கு விரைந்துள்ளனர் விபரம் இன்றுகாலை அறிவிக்கப்படும். (மா)

## யாழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் இருந்து செயல்பட்டன. யாழ் பிரதான வீதிப் பகுதி. கொட்டடி, ஆஸ்பத்திரி, ஆஸ்பத்திரிவீதி போன்ற இடங்களில் ஷெல்கள் வந்து வீழ்ந்தன. மற்றும் சில வர்த்தக ஸ்தாபனங்கள் சேதமடைந்தன.

அபாய அறிவிப்பு ஒலி (சைறன்) ஷெல் ஏவப்பட்டுள்ளதை அடிக்கடி அறிவித்துக் கொண்டிருந்ததால் நகரில்ஆங்காங்கே நின்ற பொதுமக்கள் தம்மை ஷெல் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றிக்கொண்டனர்.

'ஷெல்' வீழ்ந்து வெடித்த இடங்களில் ஒரு அடி ஆழமான குழிகள் காணப்பட்டன.


# CREST

## University of Jaffna, Sri Lanka

Applications will be received by me for the following posts from suitable candidates up to 30th september, 1986.

1. Assistant Lecturer in English Literature
2. Temporary Assistant Lecturers in-
   - Commerce/Business Administration with proficiency in English)
   - History
   - Hindu Civilization
   - Economics and Political Science
   - Christian Civilization
   - Philosophy
   - Sanskrit
   - Geography
   - Fine Arts - Indian Tradition
   - Fine Arts - Drama
   - Tamil
3. Temporary Assistant Lecturer/Tutor in-
   - B. Com. / Business Administration
   - Linguistics
4. Temporary Tutors in -
   - History
   - Geography
5. Temporary Instructors in -
   - English (Candidates awaiting results are also eligible to apply)
   - Vocal
   - Veena
   - Violin
   - Bharatha Natyam
   - Miruthangam
6. Visiting Lecturers in -
   - Principles of Management
   - Organizational Behaviour
   - Commercial and Industrial Law
   - Cost Accounting
   - Management Accounting
   - Financial Management
   - Auditing
   - Taxation
   - Sanskrit
   - Drama and Fine Arts
   - Educational Administration
   - Educational Technology
7. Visiting Instructors in-
   - Veena
   - Violin
   - Bharatha Natyam
   - Miruthangam

Applications should be made on the forms available from this office. Those who wish to obtain the forms and other details by post should send self-addressed stamped envelope of 23x10 cm in size.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of such Institutions.

REGISTRAR

University of Jaffna, Sri Lanka
Thirunelvely,
Jaffna.
03-09-1986.

[A 1250]

குதூகலத்
# திறப்பு விழா
## அம்பிகா திரையரங்கு

10 9-86 நாளை சகல காட்சிகளும்
இலவசமாகக் காண்பிக்கப்படும்.
ரசிகர்கள், நண்பர்கள். ஆதரவாளர்கள்
யாவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:-

நியூ லலிதா மாளிகை,
1-ம் மாடி,
இல: 185/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(G4526)

# நெடுந்தீவுப் படகுசேவை மீண்டும் பாதிப்பு

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு- குறிக்காட்டுவான் படகுச்சேவையில் மீண்டும் தடங்கல் ஏற்பட்டுள்ளது

நெடுந்தீவு - குறிக்காட்டுவான் பகுதிகளுக்கிடையில் நடைபெற்று வந்த அரசினர் மோட்டார் படகுகளான வடதாரகை, மணிமேகலை ஆகிய 2 படகுகளும் பழுதடைந்துள்ளதால் உரிய திருத்தம் செய்யும் இடமான காரைநகர் திருத்தத் தலத்திற்குக் கொண்டு செல்ல முடியாமல் உள்ளது.

தற்பொழுது சேவையிலீடுபட்டு வரும் ''குமுதினி''ப் படகும் அடிக்கடி பழுது ஏற்படுவதால் தொடர்சசியான சேவையில் ஈடுபடச் செய்வது சாத்தியமானதல்ல என சட்டந் தப்பட்ட இலாகா தெரிவித்துள்ளது.

இதனால் அரசின் மோட்டார் படகின் வராந்த சேவை ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி ஆகிய 4தினங்களிலேயே நடைபெறும்எனத் தெரிவிக்கப்படுகின்றது. [இ]

## பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், செவ்.

சண்டிலிப்பாய் ஆலங்குளம் முருகமூர்த்தி கோயிலில் ஆறுமுகப் பெருமானது திருவுருவத்தை பஞ்சலோகத்தில் ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் பிரதிஷ்டை செய்து வைத்தார்.

இத் திருவுருவத்தை வண்ணார்பண்ணை சுப்பிரமணியம் பாஸ்கரஸ்தபதி அமைத்துக் கொடுத்துள்ளார். [ஊ]


## 60-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி யோகலட்சுமி துரைசாமி


தோற்றம்: 17-02-1936
மறைவு: 12-07-1986

இலங்க விளக்காய் வந்து
இருள் தனைக்கடிந்து
செல்வம் மல்கிட
வைத்த பெண்ணே!
மறைந்தனை மற்றுஇங்கு
நல்வினை யற்றபாவி
நானினி யாது செய்வேன்
தொல்வினை யுன்னை நீக்கித்
துயரினைத் தந்ததின்றே.
சிருயர் கல்வி தந்து
சிறந்திடக் காத்த தாயே!
யாரிடம் குறைகள்
சொல்லி யாறுவோம்
அம்மா! அம்மா!
பாரினில் நாங்கள் என்ன
பழியினைச் செய்தோம்
அந்தோ!
நீரெமை விடுத்து ஈசன்
நிழலடி சேர்ந்திட்டீரே,

நாயகன், பிள்ளைகள்.
க. வி. துரைசாமி,
லக்ஷ்மி திலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை.
(C 4515)



## 90-வது நாள் நினைவஞ்சலி



ச. தமிழரசுவரன்
(குட்டியா)
(வீரவேங்கை அர்ச்சுனா,
லெப்டினன்ற்)
தாய்வயிற்றிலிருந்துஉதயம்
04-04-1960
தாய் நாட்டிற்காக
உயிர்த்தியாகம்:
12-06-1986

கண்கள் உறங்கு தில்லை
காண்பவையாவும் நீயே
உண்பதற்கு மனமில்லை
ஊகிப்பதற்கு ஏதுமில்லை
பண்பான உன் தூயபணி
பாரினில் தமிழர்மறவார்
எண்ணிய தமிழீழம்
எய்து மட்டும்
ஏங்காது செய்வோம்
எமது கடன்
இது சத்தியம்.

உனது ஆத்மா இறைவனின் பாதகமலங்களிற் சேரப் பிரார்த்திக்கும்:

தந்தை, தாய்,
சகோதரர்கள்.

12-06-86 அன்று எங்கள் மகனின், சகோதரனின் இறுதிக் சடங்கிலும், 12-07-86 அன்று நிகழ்ந்த அந்தியேட்டி. வீட்டுக் கிருத்தியத்திலும் பங்குபற்றிய அனைவருக்கும், துக்கம் தெரிவித்தோருக்கும் இயக்கத்தினருக்கும் எமது நன்றி.

சி. நா. சதாசிவம்,
46, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்
(C 4508)



## நெல்லியடி
## மத்திய மகாவித்தியாலயம்
## ஆண்டு-7 (தரம் - 6) அனுமதிப் பரீட்சை - 1987

விண்ணப்ப முடிவு திகதி: 22-09-86

பரீட்சை நடைபெறும் நாள்:
25-10-86 சனிக்கிழமை

எண்கணிதம்: மு. ப. 9-00 - மு. ப. 10-45
தமிழ்மொழி: மு. ப. 11-00 - பி. ப. 12-45

மு. கு: விண்ணப்பக்கட்டணம் ரூபா 3-00 ஆகும்.
C-4518


## கடமை போற்றிய உத்தம ஆசிரியை

திருமதி ஏரம்பமூர்த்தி சிவபாக்கியம் ஆசிரியையைப் பொறுத்தவரை அவரது வாழ்வும் சேவையும் மக்கள் மனதில் குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் இதயத்தல் என்றென்றும் நிலைத்திருக்கும்

மட்டக்களப்பு இராமக்கிருஷ்ண மிஷன் காரைதீவு சாரதா பெண்கள் பாடசாலையில் 1964ல் உதவி ஆசிரியையாகப் பதவியேற்றார் சிவபாக்கியம். அன்றிலிருந்து இவர் கல்லடி உப்போடை, திருகோணமலை, தம்பலகாமம் ஆகிய இடங்களிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 18 ஆண்டுகள் சேவையாற்றினர். இப் பாடசாலைகளில் இவரிடம் படித்த அநேகர் கிழக்கு மாகாணத்தில் இன்றும் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர்கள். தங்களைச் சிறந்த ஆசிரியர்களாக உருவாக்கியவர் சிவபாக்கியம் ஆசிரியை தான் என்று இவர்கள் அடிக்கடி கூறிவருகின்றனர்கள்.

தம்பலகாமம் இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலையின் அபிவிருத்திக்கு இவர் பெரும் தொண்டாற்றியுள்ளார்

கல்வித்துறையில்பின் தங்கிய பிரதேசங்களிலேயே எப்பொழுதும் இவர் சேவையாற்றி வந்துள்ளார் கிழக்கு மாகாணத்தில் மாத்திரமல்ல, வவனியா பண்டாரிக்குளம் அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலை முல்லைத்தீவ இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றிலும் அரும்பெரும் சேவையாற்றியுள்ளார். பின்னர் தமது சொந்தக் கிராமமாகிய நீர்வேலியிலும் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் சேவையாற்றி தமது ஆசிரியர்சேவையிலிருந்து ஓய்பெற்றார்.

இவர் தமது ஆசிரியசேவைக் காலத்தில் 7 ஆண்டுகள் உதவி ஆசிரியராகவும், 24 ஆண்டுகள் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றியது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளில் நீண்டகாலம் தொடர்ச்சியாக ஆசிரிய சேவையாற்றியதன்விளைவாக, சிறீ இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் சுறி சாரதாதேவி அம்மையார் ஆகியோரின் ஆத்மீகபோதனைகள் இவரது சிந்தனையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இதன் விளைவாக இவர் ஆத்மீகத் துறையில் ஆழமான ஈடுபாடுடையவராக இருந்து வந்துள்ளார்.

இவர் ஆடம்பரமற்று ஏழ்மையான அடக்கமான வாழ்க்கையை நடத்தியுள்ளார் அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட புறநிகழ்வுகளால் அவரது ஆத்மீக உணர்வில் எதுவித தாக்கங்களையும் ஏற்படுத்த முடியவில்லை. அவரது ஆத்மீக வாழ்வு சலனமற்ற ஆழமான சமுத்திரமாயிருந்தது

—ஞானி

## புத்தகங்கள் அன்பளிப்பு

நெல்லியடி, திங்கள்

நெல்லியடிப் பட்டினசபைப் பிரதேசத்துக்குட்பட்ட புதுத்தோட்டம் என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அகதிகளின் குழந்தைகளுக்கான பாலர் பாடசாலைக்கு கட்டைவேலி ஞானசாரியக் கல்லூரி அதிபர் திரு எஸ் சிற்றம்பலம் தனிப்பட்டமுறையில் பல புத்தகங்களை வழங்கியுள்ளார் அதேபோல யாழ் மாவட்ட மகளிர் அமைப்பின் நெல்லியடிக் கிளையும் பல புத்தகங்களை மேற்படி பாடசாலை நெறியாளர் திரு. எஸ் சிவசம்புவிடம் கையளித்துள்ளது. (வா)

## "மாணவர் வரவிலும், கல்வியிலும் ஆசிரியர் அக்கறை வேண்டும்"

நெடுந்தீவு, திங்கள்.

''ஆசிரியர்கள் தமது பாடசாலைகளின் கல்வித்தரத்தை மேம்படுத்த அயராது பாடுபட வேண்டும் பிள்ளைகளின் கல்வித்தரத்தில் இருந்தே பாடசாலைகளினதும் ஆசிரியர்களினதும் பணியை உணர முடியும்.''

இவ்வாறு நெடுந்தீவில் புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்ட கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. பி. எம் ஜே. அன்ரனி நெடுந்தீவுப் பாடசாலைகளினது அதிபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் பாடசாலைக்கு வரவு குறைவாக வரும் மாணவர்களில் அக்கறை கொண்டு அவர்களின் ஒழுங்கான வரவை ஏற்படுத்த வேண்டும் கல்வியில் பின்தங்கியிருக்கும் மாணவர்களை விசேட கவனம் எடுத்து படிப்பில் ஊக்கப்படுத்துதல் வேண்டும் இவ்வாறு ஒவ்வொரு மாணவர்களிலும் தனித்தனி கவனம் எடுத்துவரின் எதிர்காலச் சந்ததியினர் சகல வழிகளிலும் முன்னேற வழி உண்டு என்றார். (வா-இ)

## மாவைக்கந்தன் பெருமணி மணிக்கோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் பெருமணி மணிக்கோபுர கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.

மலேஷியாவிலுள்ளஸ்ரீமான் பாலகிருஷ்ணன் அவர்களது பொருளுதவியுடன் ஆயிரம் ரூத்தல் எடையுள்ள பெருமணி செய்யப்பட்டு அதை முறையாக வைத்துப் பிரதிஷ்டை செய்வதற்கென சித்திர ஸ்துபியுடன்கூடியமணிக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (உ)

## சென். ஜோன் அம்புலன்ஸ் வகுப்பு

வேலணை, திங்கள்

தீவுப் பகுதியில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிச் சேவைப் பயிற்சி வகுப்பொன்றினை நடாத்துவதற்கு மேற்படி அமைப்பு முன்வந்துள்ளது.

இப் பயிற்சி வகுப்புக்களை வேலணை, ஊர்காவற்றுறை சரவணை, நாரந்தனை கரம்பன், புங்குடுதீவு போன்ற இடங்களிலும் நடாத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

## பிரஜைகள்குழு வேண்டுகோள்

பருத்தித்துறை, திங்கள்

இன்றையசூழ்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் விழாக்களிலே தொடர்ச்சியாக ஒலிபெருக்கிப் வித்தல், பட்டாசு கொழுத்துதல் போன்றனவற்றை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென பருத்தித்துறை பிரஜைகள்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டு ளதாவது:

தொடர்ச்சியாக ஒலிபெருக்கி ஏவித்தல் அதுவும் இரவு நேரங்களில் பாவிப்பது பட்டாசு கொளுத்துதல் போன்ற நடவடிக்கைகள் பொது மக்களுக்குப் பெரும் இடையூறுகளை ஏற்படுத்துகின்றது தமிழ் மக்களாகிய நாம்நெருக்கடியான இக்காலகட்டத்தில் நிதானமாகச் செயற்படும் போதுதான் எமது விடிவிற்கு வழிவகுக்க முடியும். (இ)

## வீடுகட்ட நடவடிக்கை

சுழிபுரம் திங்கள்

காட்டுப்புலம் பகுதியில் வாழும் வீடு இல்லாத மக்களுக்கு காணி வாங்கி வீடு கட்டிக்கொடுக்கும் பணியில் சகோதரி செல்வி பேட்ரட்ணம் ஈடுபட்டு வருகிறார்.

முதல் இருது பேர்களுக்கு இவ்வுதவி கிடைக்கவுள்ளது. சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினர் காட்டு பகுதி தொழுநோயாளர் கஷ்ட நிலைமைகள் உலக நிறுவனங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கு விளக்கியதன் பேரில் உதவி கிடைத்துள்ளது.

## யாருடையது

திரு தங்கவேல் சபாபதி என்பவர் யாழ் பெரியகடையில் கடந்தஞாயிற்றுக்கிழமை ஒருடோச்லைட்டினையும், பத்து திறப்புக்கள் உடைய ஒரு கோர்வையையும் கண்டு எடுத்து ஈழநாடுஅலுவலகத்தில்ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலகநேரத்தில் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## பிரசாரக்கூட்டம்

சுழிபுரம், செவ்

பத்துலட்சம்வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் வீடமைப்புக் கடன்கள் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலம் வழங்குதல், புதிய ஐக்கிய நாணய சங்கங்கள் அமைத்தல் என்பவற்றுக்கான ஒரு பிரசாரக்கூட்டம் எதிர்வரும் 13ம் திகதி சனிக்கிழமை காலை பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து வைத்தியலிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். (இ)

## "நல்லைக் கந்தரந்தாதி" நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செவ்.

''ஆன்மீக பலமுள்ளவர்கள் இறைவன் மேல் துதிப்பாடல்களை பாடுவதில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். இறைவன் இவர்கள் மேல் தன் அருள் மழையைச் சுரந்து கொண்டு இருப்பான் நல்லூர்க் கந்தன் மேல் பல துதிப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளபோதும் இன்று வெளியிடும் நல்லைக் கந்தரந்தாதி' யாவற்றிலும் மேலானதாக சிறப்புமறு விளங்குகிறது''

இவ்வாறு அருட்கவி நாகபரமசாமியின் 'நல்லைக்கந்தரந்தாதி' நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற இவ்விழாவில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு வ. ந சிவராசா நிகழ்த்தினர் அறிமுகவுரையை யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு க சிவலிங்கராசா நிகழ்த்தினர். ஆய்வுரைகளை திரு. க சொக்கலிங்கம் திருமதி வசந்தா வைத்தியநாதன் கலாநிதி ரா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் நிகழ்த்தினர்கள்.

நூலாசிரிரை ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிகள் கௌரவித்துப் பொன்னுடை போர்த்தினர்.

நூலாசிரியரின் பதிலுரையைத் தொடர்ந்து நன்றியுரையை நல்லை ஆதீன மேலாளர் திரு சி த. நடராசன் நிகழ்த்தினர்- (ச-வா)

## விமான மீட்பு: அதிரடிப்படையின் செயல்

# இந்திய - பாகிஸ்தான் உறவுகளைப் பாதிக்கும் -ராஜீவ்

புதுடில்லி, செப். 8

**கராச்சி விமானநிலையத்தில் அமெரிக்க 'ஜம்போ ஜெட்' விமானம் கடத்தப்பட்ட சம்பவத்தில் பாகிஸ்தான் அதிரடிப்படையினரின் நடவடிக்கை இந்திய பாகிஸ்தான் உறவுகளை பாதிக்கக்கூடுமென்று இந்திய பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.**

கடந்த வெள்ளிக்கிழமை பம்பாயிலிருந்து 400 பயணிகளுடன் அமெரிக்கா புறப்பட்ட இந்த ஜெட் விமானத்தை துப்பாக்கிமுனையில் நான்கு அராபியர்கள் கடத்தி கராச்சி விமானநிலையத்தில் தடுத்து வைத்திருந்தனர். இச்சம்பவத்தையடுத்து இடம்பெற்ற மீட்பு நடவடிக்கையில் 18 பயணிகள் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தனர். இச் சம்பவத்தில் பாகிஸ்தான் அதிரடிப்படையினரின் நடவடிக்கை குறித்து திரு ராஜீவ்காந்தி கண்டனத்தை தெரிவித்திருந்தார்.

ஹராரேயில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் பங்குபற்றிய பின்னர் நாடு திரும்பிய திரு ராஜீவ்காந்தி நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில், ''மீட்பு நடவடிக்கைகளை பாகிஸ்தான் ஒழுங்காக மேற்கொள்ளாத காரணத்தாலேயே 18 பேர் இறக்கநேரிட்டதுடன் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தார்கள்'' என்றார்.

இதேவேளையில் மீட்பு நடவடிக்கையை தமது துருப்பினர் கையாண்டவிதம் குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி ஜனுப் ஸியாவுல் ஹக் பாராட்டு தெரிவித்துள்ளார். பிடிபட்ட கடத்தல்காரருக்கு மரணதண்டனை விதிக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

இவர்களில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்ற மூவரும் கைதுசெய்யப்பட்டனர்.

### பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் கருத்து

''கடத்தப்பட்ட அமெரிக்க விமானத்தை மீட்கும் விடயத்தில் பாகிஸ்தான் நடந்துகொண்டவிதம் சரியானது'' என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர். ஜவ்ரி ஹௌவ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி விமானத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு இந்தியன் ஏயர் லைன்ஸ் உதவி விமானம் ஒன்று பம்பாய் வந்து சேர்ந்துள்ளது. காயமடைந்த 25 பேருடன் கொல்லப்பட்ட ஆறு பேரின் சடலங்கள் உட்பட 98 பேர் இந்த உதவி விமானமூலம் வந்தனர். இவர்களுடன் இந்திய மத்திய அமைச்சர்கள் இருவரும் ஒன்பது மருத்துவ பணியாளர்களும் அமெரிக்க விமான அதிகாரிகள் சிலரும் இந்த விமானத்தில் வந்தனர். காயமடைந்த 25 பேரும் பம்பாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் நிலைமை மோசமாகவுள்ளதாக தெரிய வருகிறது. (சி)

உலகச் செய்திகள்

## அமெரிக்க பத்திரிகையாளர் உளவு வேலையில் ஈடுபட்டார்

### சோவியத் குற்றச்சாட்டு

மொஸ்கோ, செப். 8

அமெரிக்க பத்திரிகையாளர் நிக்லஸ் பனிலோவ் உளவு வேலைகளில் ஈடுபட்டாரென்று சோவியத்யூனியன் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த மாதம் 30ம் திகதி முதல் சோவியத்யூனியனில் ராணுவச் சிறைச்சாலையொன்றில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பனிலோவ் மீது நேற்று உத்தியோகபூர்வமாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகள் நடைபெறவுள்ளன.

சோவியத் சட்டத்தின்படி இவர் குற்றவாளியாக காணப்பட்டால் பதினைந்து வருட சிறைத்தண்டனை அல்லது சடுதிய சிறைத் தண்டனை அல்லது மரணதண்டனை விதிக்கப்படலாம்.

1960ம் ஆண்டுக்குப் பின்னர் உளவுபார்த்த குற்றச்சாட்டின்பேரில் அமெரிக்கர் ஒருவர் விசாரணைசெய்யப்பட விருப்பது இதுவே முதல்தடவையாகும்.

## யாழ். மாவட்டப்பாடசாலைகள்:

# ஆங்கில ஆசிரியர்கள் விபரம் கல்வியமைச்சு சேகரிப்பு

மாவிட்டபுரம், திங்கள்

யாழ் மாவட்ட பாடசாலைகளில் கடமைபுரியும் ஆங்கில ஆசிரியர்களின் விபரங்களை கல்வியமைச்சின் ஆங்கில பிரிவு கோரியுள்ளதை அடுத்து அவ் விபரங்களை சேகரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடமை புரியும் ஆங்கில ஆசிரியர்களின் அனுபவம் சேவை பற்றும் விபரங்களை கல்வியமைச்சின் ஆங்கிலப் பிரிவு கோரியுள்ளது.

இதையடுத்து அவ் விபரங்களைச் சேகரிக்க யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான படிவங்களை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி ஆங்கில ஆசிரியர்களின் விபரங்களைப் பெறுவதில் யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். [சி]

### பங்களாதேஷில்

# ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க பல அரசியல் கட்சிகள் முடிவு

டாக்கா, செப் 8

பங்களாதேஷில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பதென பல அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

பழைய 15 கட்சி கூட்டணியிலிருநது பிரிந்து சென்ற 5 கட்சிகளும் மற்றுமொரு கட்சியுமே இவ்வாறு தேர்தலை பகிஷ்கரிப்பதென முடிவுசெய்துள்ளன

இராணுவச்சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதால் ஜனாதிபதி தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறாது என்று மேற்படி கட்சிகள் கருதுகின்றன.

நடுநிலை அரசு ஒன்றின் மேற்பார்வையில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற மக்கள் இயக்கம் தேவையென்று இக்கட்சிகள் கேட்டுள்ளன கடந்த மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலை ரத்துசெய்யவேண்டுமென்றும் இவை கோரிக்கை விடுத்துள்ளன. (சி)

### திருட்டுப்போன

# 5 நீரிறைக்கும் யந்திரங்கள் விழிப்புக்குழுவினால் மீட்பு

வல்வெட்டித்துறை, திங்கள்

இரவு நேர ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் களவு மற்றும் சமூக விரோதச் செயல்களிலிருந்து கிராம மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் பொருட்டு தொண்டைமானாறு காட்டுப் புலக் கிராமத்தில் விழிப்புக் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

இக் குழு சிலநாட்களுக்குள் பலதிருடர்களைக் கண்டு பிடித்து விடுதலைப் புலிகளின் ஒத்தாசையுடன் 5நீ, இறைக்கும் இயந்திரங்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளது. திரு. ச. மயில்வாகனம் தலைவராகவும், செயலாளராக திரு. வி விஜயகுமார் திரு மு விஜயரத்தினம் பொருளாளராகவும், மற்றும் எட்டு உறுப்பினர்களையும் கொண்ட இக்குழு செயற்பட்டுவருகிறது. [இ]

## பிரிட்டனில் இனப்பாகுபாடு பெருமளவில் அதிகரிப்பு

### 'ரனிலக் ரஸ்ற்' அறிக்கை

லண்டன், செப் 8

பிரிட்டனில் இனப்பாகுபாடு பெருமளவில் அதிகரித்து வருவதாக இன்றுஇங்கு வெளியான அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் வேலைகொள்வோரில் மூன்றில் ஒருபங்கிற்கும் அதிகமானோர் கறுத்த இனத்தவர் விடயத்தில் பாரபட்சம் காட்டுவதாக பிரிட்டனில் உள்ள 'ரணிலக் ரஸ்ற்' என்னும் இன உறவுக்கான ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் போது இருந்ததைவிட அதிகமானதாகும்

கடந்த பத்தாண்டு காலத்தில் வேலைவாய்ப்பு துறையில் இனப்பாரபட்சம் அதிகரித்து வந்துள்ளதையே இந்த மதிப்பீட்டு அறிக்கை எடுத்துக் காட்டுகிறது

## முகாமிலிருந்து லொறி எடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம் செவ்

வசாவிளான் சந்திக்கருகாமையில் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான லொறி பலாலி இராணுவ முகாமிலிருந்து கட்டி இழுத்துவரப்பட்டது.

யாழ் வர்த்தகர் எஸ். வி முருகேசுவிற்குச் சொந்தமான இந்தலொறி துப்பாக்கி ரவைகளினால் பலத்த சேதத்துக்குள்ளாகி இருந்தது.

லொறியில் ஆங்காங்கே இரத்தக்கறைகள் இருக்கக் காணப்பட்டன. (வா)

## கும்பாபிஷேகம்

மண்டைதீவு. திங்கள்

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 10-ம் திகதி நடைபெறவுள்ளது.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் அலங்கார உற்சவம் நேற்று திங்கட்கிழமைஆரம்பமானது. தொடர்ந்து 15 நாட்களுக்கு நடைபெற்று 22ம் திகதி தீர்த்தோற்சவமும், 23ந்திகதிவைரவப் பெருமானுக்கு விசேட பூசையும் நடைபெறவுள்ளது. (ச)

### ''தென்னுபிரிக்க அரசின் போக்கில்

# அர்த்தமுள்ளமாற்றம் ஏற்பட்டால் தடைகளை நிறுத்த உலக நாடுகளைக் கோருவேன்''

**— பிஷப் டுட்டு**

பிரிட்டோரியா ,செப் 8

தென் ஆபிரிக்கஅரசுஅர்த்தமுள்ள மாற்றம் எதையும் மேற்கொண்டால் அந்த நாட்டிற்கு எதிராக தடைவிதிக்கும் எந்தவொரு திட்டத்தையும் நிறுத்திவைக்குமாறுஉலக நாடுகளை கேட்டுக் கொள்ள தாம் தயாராய் இருப்பதாய் இன ஒதுக்கலுக்கு எதிராக பிரசாரம் செய்துவரும் பிஷப் டெஸ்மான்ட்டுட்கு கூறியுள்ளார்.

தென்ஆபிரிக்க திருச்சபையின் 20 லட்சம் அங்கிலிக்கன் கிறிஸ்தவர்களின் தலைவராக அதிகார பூர்வமாக நியமிக்கப்பட்டபோது முதன் முதலில் கேப்டவுனில் சென். ஜேஜ் ஆலயத்தில் உரையாற்றிய போதே பிஷப்டெஸ்மண்ட் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''பிரிட்டோரியா அரசு கடந்த யூன்மாதம் பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலையை அகற்ற வேண்டும். வெள்ளையரல்லாதோர் வசிக்கும்பகுதிகளிலிருந்து ராணுவத்தை வாபஸ் பெறவேண்டும், அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும், புதிய அரசியல் சாசனம் பற்றி ஆபிரிக்கதேசிய காங்கிரஸ் உட்பட வெள்ளையரல்லாத ஸ்தாபனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.''

ஆபிரிக்காவின் தென்பிராந்திய அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவராக கறுப்பு இனத்தவர் ஒருவர் இந்தப்பதவிக்கு நியமிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். (சி)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு. செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

குவைத், அபுதாபி, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

**GROUP ATLANTIC**

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)

163, Hospital Road, Jaffna.

(A 1065)

## விவசாயிகளுக்கு

# விதைநெல் உரியவேளையில் வழங்க ஏற்பாடு

நெடுந்தீவு, திங்.

பெரும் போகத்துக்குத் தேவையான விதை நெல்லை யாழ் மாவட்ட விவசாயிகளுக்குப் பெற்று உரிய வேளையல் வழங்குமாறு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் சகல யாழ் மாவட்டப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் கோரியுள்ளார்.

பரந்தன், கிளிநொச்சிப், பகுதிகளில் இப்பொழுது சிறுபோக அறுவடை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் ப. நோ. கூ. சங்கங்கள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு தேவையான விதை நெல்லை விநியோகிக்கும் படியும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கு விளைச்சலுக்கு உகந்த விதை நெல் வர்க்கமான பி ஜி 34/06 62/355 என்பனவற்றைத் தெரிவு செய்யும் படியும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விவசாயப் பகுதியினரால் யாழ். மாவட்டத்துக்குத் தேவையான 8 000 புசல் விதை நெல் வெளியிடங்களில் இருந்து தருவிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்தது. போக்குவரத்துத் தடங்கல் சம்பந்தப்பட்ட இலாகாவிடம் வாகனம் இன்மை என்பனவே இந்நிலைக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. (இ)

## விஞ்ஞான விழா

யாழ்ப்பாணம், செவ்

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் வடமாகாண மாணவர்களுக்கான விஞ்ஞான தினத்தினை இன்று செவ்வாய்க்கிழமை காலை ஸ்ரீஸ் சோமஸ்கந்தா கல்லூரியில் நடாத்தவிருக்கிறது. இவ் வைபவத்தை கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் ஆரம்பித்து வைப்பார்.

இவ்வைபவத்தில் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சி சிவஞானசுந்தரம் (நந்தி), விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம். கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலக்கிருஷ்ணன் ஆகியோர் சிறப்புவிருந்தினராகக் கலந்து விஞ்ஞானக் கருத்துக்கள் வழங்குவார்கள். மாணவர்களுக்கானவிஞ்ஞானவினுப் போட்டி, விஞ்ஞ னப்பேச்சுப் போட்டி என்பனவும் அங்கு இடம்பெறும்.

விஞ்ஞான ஆசிரியர்களும், உயர்வகுப்பு மாணவர்களும் இதில் பங்குபற்றுமாறு விஞ்ஞான அறிவியல்பரப்பு யாழ். கிளை செயலாளர் திரு. ச. தேவதாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார் (இ)

## அமரர் முத்தையா

உருத்திரபுர மக்களின் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கின்ற சமய சமூக சேவையாளர் மார்க்கண்டு அம்மான் என அழைக்கப்படும் சரவணமுத்து முத்தையாவின் நினைவுதினம் இன்றாகும்.

இருபத்தைந்து ஆண்டுகளாக அஞ்சல் ஊழியராக சேவையாற்றிய இவர் உருத்திரபுரம் மக்களின் நெஞ்சங்களில் இடம்பெற்ற ஒரு சிறந்த சேவையாளராக விளங்கினர்.

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக்கொண்ட அமரர் முத்தையா பழகுவதற்கு எளிமையானவர். சிறந்த பண்பாளர்.

வன்னிப் பிரதேசத்தில் வரலாற்றுப்புகழ்மிக்க உருத்திரபுரம் சிவன் கோவில்பரிபாலன சபை உபதலைவாரகவிருந்து இவ் ஆலய புனரமைப்பிற்கு பெரும சேவை புரிந்தார்.

சிவநகர் கிராம முன்னேற்றச் சங்க தலைவராகவும் பாவனையாளர் சங்க தலைவராகவும் பணியாற்றினர் மக்களுக்காக தம்மை அர்ப்பணித்த பெருந்தொண்டர் மார்க்கண்டு மனைவி மக்கள் உறவினரை மட்டுமல்ல உருத்திரபுரம் வாழ் மக்களையும் தவிக்க விட்டு சேவையில் இருக்கும் போதே இறையடி சேர்த்தார்.

இவரது மறைவு உருத்திரத்திற்கு மட்டுமல்ல சைவநல் உலகிற்கே பேரிழப்பாகும்.

— ஓர் அன்பர்

# கற்றோர் மத்தியில் மதிப்பை தரும் சுருக்கெழுத்துக்கலை

வல்வெட்டித்துறை, திங்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் இப்பகுதி இளம் சமுதாயத்தினர்க்கு சுருக்கெழுத்துக் கலையை சேவை நோக்குடன் பரப்பி வருகிறார்கள். பொருளாதார நிலை காரணமாக தட்டச்சுப் பயிற்சியினை அவர்களால் எல்லோர்க்கும் அளிக்க முடியவில்லை. வசதி படைத்தவர்ளும், பெற்றோர்களும் அவர்களுக்குத் தமது பூரண ஆதரவைக் கொடுத்தால் தட்டச்சுப் பயிற்சியை எல்லேருக்கும் அளிப்பது சாத்தியமாகும்''.

இவ்வாறு பிற்மன் ஆங்கில சுருக்கெழுத்து 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தால் அல்வாயில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ ஐயாத்துரை குறிப்பிட்டார்

கழகத்தின் பிரதம அமைப்பாளர் திரு க வ சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பட்டையக் கணக்காளர் திரு ஆ. சோமசுந்தரம்பிள்ளை பேசுகையில், ''தமிழ் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி மீன்பிடித் துறையிலும், விவசாயத் துறையிலுமே தங்கியுள்ளது. சாதாரண விவசாயக் குடும்பத்தின் சராசரி மாதாந்த வருமானம் குறைந்தது 4,000 ரூபா வரத் தக்கதாக நாம் திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்த வேண்டும். எல்லோரும் அரச தொழில் வாய்ப்புக்களிலேயே நாட்டமுடையவர்களாக இருக்கிறார்கள். அதனால் கிடைக்கும் ஊதியமோ குறைவானது.

மேலை நாடுகளில் உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டுஅதிகம் சம்பாதிக்கிறார்கள் ஆனல் நீங்கள் பயிலும் சுருக்கெழுத்துக் கலையோ உங்களை என்றும் ஒரு நல்ல நிலையில் பெரும் அறிஞர்கள், அதிகாரிகள் மத்தியில மதிப்பைத் தரக் கூடிய சிறந்த தொழிற்கலையாகும், மனம் வைத்துக் கற்பதனுல் இதனுல் பெறும் பயன் வீண் போகாது'' என்றார்.

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அதிபர் திரு எம் சர்மாவும் உரையாற்றினர். கழகத்தின் கரவெட்டி பயிற்சி நிலைய தமிழ் சுருக்கெழுத்துப் போதனசிரியை செல்வி மாலினி தவகுலரத்தினம் நன்றி கூறினர். (வா)

## கருணாகரர் திருவிழா

யாழ்ப்பாணம், செவ்

இன்று செவ்வாய்க்கிழமை உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய கொடி ஏற்றவிழா நடக்க இருக்கிறது.

17ம்திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 18ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் வழமைபோல நடைபெறவுள்ளன.

# இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—24 (9-9-1986)
கிழமை—செவ்வாய்
திதி பஞ்சமி காலை 7-11ன் மேல் ஷஷ்டி
நக்ஷத்திரம்— விசாகம் பி. ஆ. வரை.

மேடம்:- அன்பின் அணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும். காதல் விவகாரம் தலைதூக்கும் சிலருக்குப் பொதுசன மதிப்பும் உண்டு.

இடபம்:- ஏக்கத்தின் சாயல் தாக்கும், எதிர்பாராதவகையில் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். விபத்திற்கும் இடமுண்டு. கவனம் வேண்டும்.

மிதுனம்:- தந்தைவழிப் பெருமைக்கும் தாராளமாக இடம் உண்டு. நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்களின் ஆதரவம் உண்டு.

கடகம்:- விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும். நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும் நலலந...

சிங்கம்;: சிலருக்குப் புதிதாகத் தொழில் கிடைக்கும். சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும் ... கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு

கன்னி:- தொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். நண்பர்களின் சகவாசத்தால் சிக்கலகன்ன் நடுவில் மாட்டிக் கொள்ள நேரிடும் நடுநிலமை நன்று.

துலாம்:- குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். வாழ்க்கையில் சோர்வுக்கு இடம் உண்டு சிறிய விஷபீடையும் ஏற்படலாம்.

விருச்சிகம்:- உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர்வுக்கு வழிகாண்பீர்கள். மேலிடத்து உறவு உற்சாகத்தை அளிக்கும். பிதாவழி சுகமும் உண்டு.

தனுசு: போட்டி விவகாரங்களில் ஈடுபடுவீர்கள். சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்கும். அரசாங்க ஊழியராயின் ஆதரவிற்கு இடமுண்டு.

மகரம்:- மாதுவழி ஆதரவுக்கு இடமுண்டு நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவர் புதிய முயற்சிகளும் கைகூடும்.

கும்பம்:- குடும்பத்தில் அமைதி ஏற்படும். வீட்டிலும் புத்திரர் மகிழ்ச்சியடைவர், தொழிலிலும் வெற்றியுண்டு

மீனம்:- முக்கியமான காரியங்களை இன்றுபின் போடவும். உள்வீட்டிலேயே உளவுவேலைநடை பெறலாம். உசாராக இருக்கவும்.

திருமலை
வே ரவீந்திரன்

## இலவச பரிசோதனை

பளை, திங்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கூட்டம் அதன் தலைவர் டாக்டர் பே பிலிப்பின் தலைமையில் நடைபெற்ற போது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

படித்து விட்டு வேலையற்றிருக்கும் பெண் பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றம் கருதி நாளை 10ம் திகதி ...ன்ருக்கான தையற் பயிற்சி வகுப்பு ஆரம்பித்தல் ... இரத்த அழுக்கப் பரிசோதனையையும் இலவச ரோக பரிசோதனையையும் சிறந்த முறையில் நடாத்துவது

## உரத்திற்கு தட்டுப்பாடு

மாவிட்டபுரம், திங்கள்

யாழ். மாவட்டத்தில் உரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து விவசாயிகள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர்.

யாழ் மாவட்டத்திற்கு உரவகைகள் வந்து சேர்வதில் ஏற்கனவே தடங்கல் ஏற்பட்டிருந்த போதும் அரச அதிகாரிகள் எடுத்த முயற்சியால் அண்மையில் கப்பல் மூலம் உரம்வந்து சேர்ந்தது.

அந்த உரமும் தற்போது முடியும் தறுவாயில் உரக்களஞ்சியங்களில் தட்டுப்பாடு நிலவி வருவதால் விவசாயிகள் தமக்குத் தேவையான உரவகைகளை பெற முடியாமலிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

உரத்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு கப்பல் மூலம் உரத்தை தருவிக்க அரச அதிகாரிகள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (வா)

நாளை ஆரம்பம்
87 A/L DAY CLASS
(பிரிவு I)
விபரங்கட்கு:
NEW MASTER INSTITUTE
BMC LANE, JAFFNA.
(கவர்ச்சியான விளம்பரங்கள் எம்மிடம் இல்லை. நிறைவான, விரிவான சேவை எம்மிடம் உண்டு).
(A 1319)

பிரயாண ஒழுங்கு
கனடா டென்மார்க்
பிரான்ஸ் இத்தாலி
ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி எதிர்வரும் 15ம் திகதி இங்கிருந்து அழைத்துச் செல்ல உள்ளார்.
உங்கள் கடவுச் சீட்டுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
மற்றும் பாஸ்போட், பொண்ட், விசா, ரிக்கற் ஆகியவற்றிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
"லிப்ருஸ் றவல்ஸ்"
ஆர். வி. ஜி. கட்டிடம்
70, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.
(A 1315)

இதோ! கல்வியங்காடு சந்தையருகில்
அமைதியான பாதுகாப்பான சூழலில்
நாளை மங்களகரமான
திறப்பு விழா
COMSAT
COMMUNICATIONS
INTERNATIONAL TELEPHONE AND TELEX BUREAU
No: 791/1 PointPedro Road, (1-st Floor)
Kalviyankadu, Jaffna.
எதிர்வரும் 10-09-86 புதன்கிழமை காலை 9-00மணி முதல் 11-00மணிவரைவரும் சுபமுகூர்த்த வேளையில் இல 791/1, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள மேல்மாடி கட்டிடத்தில்:
கொம்சட் கொமினிகேஷன்
என்னும்
ரெலிபோன் - ரெலெக்ஸ்
சேவைகள் ஸ்தாபனத்தை
டாக்டர் G குமரேந்திரன் அவர்கள்
(வைத்தியப் பொறுப்பாளர், மெடிக்கல் கிளினிக், கல்வியங்காடு)
ஆரம்பித்துவைப்பார்கள்.
நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இவ்வண்ணம்
தங்கள் நல்வரவை நாடும்:
வா. ஜெயமோகன்
(C4501

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 9-9-86

# யாழ்.பொதுஸ்தாபனத்தலைவர்கள் அரசஅதிபருடன்சந்திப்பு
# 'ஷெல்' தாக்குதலின் தாக்கம்பற்றி பாதுகாப்பு அமைச்சுக்கு புகாரிட வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தில்தற்போதுள்ள ஷெல்தாக்குதல்களினால் நகரத்தில் உள்ள ஆஸ்பத்திரி பாடசாலைகள், வங்கிகள்,வர்த்தக ஸ்தாபனங்கள் என்பன செயல்பட முடியாது உள்ளது. இதனை யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவர் மூலமாக வடபகுதி பிரிகேடியருக்கு தெரிவிப்பதற்காகவும் பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டு பேசுவதற்காகவும் யாழ்ப்பாணத்திலுள்ள ஆஸ்பத்திரி, வர்த்தக ஸ்தாபனங்கள் போன்றவற்றின் தலைவர்கள், அதிபர்கள் அடங்கிய குழுவொன்றுநேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கத்தைச் சந்தித்தது.

யாழ். செயலகத்தில் இருந்து வடபகுதி பிரிகேடியருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமைகள் எடுத்துக் கூறப்பட்டன.

யாழ். வைத்திய அதிபர் டாக்டர் நச்சினார்க்கினியர் யாழ். ஆஸ்பத்திரியின் அவல நிலையையும், ஷெல்கள் வந்து ஆஸ்பத்திரியினுள் விழுகின்ற நிலைமைகளையும் எடுத்துக் கூறினார்.

யாழ். வர்த்தக சங்கச் செயலாளர் திரு. நமசிவாயம், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி இராஜரட்ணம், யாழ். மத்திய கல்லூரி உப அதிபர், யாழ். நகரில் உள்ள வங்கிகளின் அதிகாரிகள், நீதிமன்றங்களின் பிரதிநிதிகள், யாழ். பிரஜைகள் குழு திரு. பாலசுப்பிரமணியம் உட்படப் பலர் இக்குழுவில் அங்கம் வசித்தனர்.

ஒவ்வோர் பகுதியினரும் தத்தமது ஸ்தாபனங்களின் சார்பில் பிரச்சினைகளை தெளிவாகக் கூறினார்கள்.

பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டு நிலைமையை எடுத்துக் கூறும்படி மேற்படி குழுவினர் யாழ். அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

நேற்று மாலை பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்பு கொள்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு எமது முறைப்பாட்டைக் கூறியுள்ளோம். அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மேற்படி குழுவினர் கருத்துத் தெரிவித்தனர். [ச]

## துண்டுப் பிரசுரம்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வியைச் சீரழிக்கும் நிர்வாகிகளை இனங்காணுங்கள்' என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

## சிங்கள மக்கள் எமது எதிரிகளல்ல அரசாங்கம்தான் எதிரி
### புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்கூட்டாக அறிக்கை

கிளிநொச்சி, திங்.

'சாதாரண சிங்கள மக்கள் எமது எதிரிகளல்ல அரசுதான் எமது எதிரி. நாம் மக்களுக்கெதிராக ஆயுதம் தூக்கமாட்டோம் இராணுவத்திலிருந்து வெளியேறும் எவரையும் காப்பாற்றி பாதுகாப்பாக அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைப்போம்.'

இவ்வாறு கிளிநொச்சியில் சரணடைந்த ஆனையிறவு இராணுவமுகாம் சிப்பாய்கள் தொடர்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் கூட்டாக கிளிநொச்சியில் வைத்து விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அககூட்டறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'இராணுவ முகாமில் இருந்து வெளியேறுவோர் உண்மையில் உயிருக்குப் பயந்து தான் வெளியேறுபவராக இருந்தால்தான் பாதுகாப்பு ளிப்போம். நாம் பயங்கரவாதிகள் அல்ல, விடுதலைப் போராளிகள் என்பதை சரணடைந்த இரு சிப்பாய்கள் மூலம் நிரூபித்துள்ளோம். (ஒ)

## யாழ். ஆஸ்பத்திரிக்குள் ஐந்து கிலோ எடையுள்ள 'ஷெல்' துண்டு வீழ்ந்தது

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குள் ஐந்து கிலோ நிறையுடைய ஷெல் துண் ஒன்று வந்து வீழ்ந்தது. இத்துண்டு வீழ்ந்து மரக்கிளைகள் முறிந்துவிட்டன.

நேற்று பிற்பகல் 2-40 மணிக்கு இச்ஷெல் துண்டு வீழ்ந்தது இச்சமயம் எவரும் அவ்விடத்தில் இல்லாமையால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

யாழ். ஆஸ்பத்திரியின் வைத்திய அதிபர் டாக்டர் நச்சினார்க்கினியர் யாழ். அரசாங்க அதிபருடன் ஷெல் அடிப்பதால் ஆஸ்பத்திரிக்கு ஏற்படுகிற ஆபத்துக்களையிட்டுப் பேசிக்கொண்டிருந்த சமயமே இச் ஷெல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியினுள் வீழ்ந்தது குறிப்பிடத்தக்கது. (ச]

## கூட்டங்களில் குண்டுவீச்சு: முன்னாள் ராணுவகுழு பொறுப்பு?

கொழும்பு, திங்கள்

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அண்மைக்கால கூட்டங்களில் இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவங்களுக்கு முன்னாள் இராணுவக்குழுவொன்றே பொறுப்பு என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ. தே.க. அரசின் உத்தேச மாகாணசபைத் திட்டத்தை பொதுமக்களுக்கு விளக்கி, ஆதரவுதேடும முயற்சியில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஈடுபட்டு வருவது தெரிந்ததே. இதற்காக அக்கட்சி நாட்டின் பல பாகங்களிலும் கூட்டங்களை நடத்தி வருகின்றது.

பாணந்துறை,கல்கிஸ பகுதிகளில் அண்மையில் இரு பொதுக் கூட்டங்களில் அக்கட்சியின் செயலர் விஜயகுமாரணதுங்க உரையாற்றிக் கொண்டிருக்கையில் குண்டுகள் வீசப்பட்டன.

இதுபற்றி நடைபெற்ற விசாரணைகளின்போது ராணுவத்தில் முன்னர் கடமையாற்றிய குழுவொன்றே இச்செயலில் ஈடுபட்டிருக்கலாம் என தெரியவந்துள்ளதாம். மேலதிக விசாரணைகள்நடைபெறுகின்றன. [ஊ]

'ஷெல்'

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஹொர்லிக்ஸ் போன்றவை இந்த ஷெல துண்டுகள்பட்டு உடைந்து நொருங்கிக்காணப்பட்டன. [ச-கே]

அம்புலன்ஸ்,..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

வீதிகளில் நின்று வேடிக்கை பார்ப்பது, தேவையிலலாமல் வீதிகளில் நடமாடுவதைப் பொதுமக்கள் தவிர்த்துக் கொள்வதுடன் ரெசோவின்

அம்புலன்ஸ் சேவை தடங்கலன்றி நடைபெறபாதசாரிகள், தனியார் வாகன உரிமையாளர்கள், சாரதிகள் தம்மோடு ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

இரத்தம் தேவைப்படும் பொழுது ஒலிபெருக்கி மூலம் தம்மால் மக்களிடம் வேண்டுகோள் விடப்படும் எனவும் அப்பொழுது பொதுமக்கள் இரத்தம் வழங்க வேண்டுமெனவும்அவர் தனது வேண்டுகோளில் வலியுறுத்தி உள்ளார். [ஒ]

உரிமை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தக்க ஒருவரின் சடலம் உறவினர் ஒருவரும் இனங்காணாத நிலையில் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது,

ஆஸ்பத்திரியின் பிரேதச்சாலை சரிவர இயங்காதமையால் உறவினரை உடன் தொடர்புகொள்ளும்படி ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுள்ளது. [ஔ]

## மரண அறிவித்தல்

### முத்துப்பிள்ளை கிருஸ்ணர்

திருமதி முத்துப்பிள்ளை கிருஸ்ணர் காலமாகிவிட்டார் இவர் முன்னைநாள் சுபாஸ்கபே டிரைவர் கிருஸ்ணர் என்பவரின் அருமை மனைவியும், திருமதி காந்திமதி இரத்தினத்தின் அருமைதாயாரும், திரு இரத்தினத்தின் மாமியாரும், யோகரத்தினம், ரட்ணகாந்தி, சதீஸ்வரன், அனுஷ்சியா, செந்தூரன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 9-9-86 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக 23/2, 5ம் குறுக்குத் தெருவிலிருந்து துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறுரூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

செ. இரத்தினம்
உரிமையாளர்: காந்தி கபே,
யாழ்ப்பாணம்.

[C 4529]

### கந்தசாமி கார்மேகராஜா



யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி 119/5 மைலன்ஸ் கட்டிடதில் வசிப்பவரான கந்தசாமி கார்மேகராஜா [மக்கட்] அகால மரணமானார். இவர் நவநீதத்தின் அன்புக்கணவரும் நிரஞ்சனயின் தந்தையும் வைரமுத்து இராசம்மாவின் மருமகனும் ஆவர்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் (09 - 09 - 86] இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 - 00 மணியளவில் அன்னாரின் சுழிபுரம் இல்லத்தில் நடைபெற்று திருவடி நிலை மடானத்தில் தகனம் செய்யப் படும்.

இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

கலைவேம்படி,
சுழிபுரம்.

தகவல்: திருமதி
கா. நவநீதம்
யுப் அ உருத்திராவும்
மைலன்ட்ஸ் பில்டிங் நண்பர்களும்.
(C-4522)

## மரண அறிவித்தல்

### இராஜரத்தினம் ரவிந்திரன் (ரவி)
(வேங்கை குயிலன்)



மலர்வு:
04 - 07 - 1964

உதிர்வு:
03 - 09 - 1986

அல்வாயைச் சேர்ந்தவரும் மூளாயைப் பிறப்பிடமாக கொண்ட இராஜரத்தினம் ரவீந்திரன் வீரமரணம் எய்தினர். இவர் மாங்குளம் மகாவித்தியாலயம், வைத்தீஸ்வரா ஹாட்லி கல்லூரிகளின் பழைய மாணவனும் இராஜரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், இராஜேந்திரன், இராஜகுலேந்திரன் ரஜனி [மஞ்சு அகியோரின் அன்புச் சகோதரனுமாவார்

இவ்வறிவித்தலை உற்றூர், உறவினா, நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்,
நாவலடி,
அல்வாய் வடக்கு, அல்வாய்.
(C-4528)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram. Eelanadu. Telephone: 22389—24126.